DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 57/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : வித்யா (மருத்துவர்) (Pw.6)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day of March 2026

(2வது எதிரி ஆஜர் இல்லை 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் . எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை –**

நான் தற்போது காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.07.2023ம் தேதியன்று மாலை 5.00மணிக்கு திருச்சுழி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது முருகையாபுரம் ஊரைச் சேர்ந்த 60 வயதுடைய மங்கையன் என்பவர் தானாக சிகிச்சைக்கு வந்தார். 6 அடையாளம் தெரிந்த நபர்கள் தன்னை அவரது

வீட்டில் வைத்து கம்பை வைத்து மாலை 4மணியளவில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு வலது கால் மொழியில் சிராய்ப்பு காயம் இருந்தது. இடது முழங்கையில் ஒரு கன்றிய காயம் இருந்தது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (**அந்த காயச்சான்று அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

சிகிச்சைக்கு வந்த நபர் மருத்துவமனைக்கு வந்தபோது காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் ஆமாம். தன்னை 6 நபர்கள் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். மரக்குச்சியால் தாக்கியதாக கூறினார் என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட காயம் வாய்க்கால் வரப்பில் கீழே விழும்போது சிராய்ப்பு காயம் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்–னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்–பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.